செ.வெ.எண்: 20 /ஜூன் நாள் : 09.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## இளைஞர்களுக்கு இராணுவத்தில் வேலைவாய்ப்பு

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர்களை கல்விப்படைப்பிரிவு நுழைவு, டெக்னிக்கல் நுழைவு மற்றும் டெக்னிக்கல் பட்டதாரிக்கான நுழைவு ஆகிய பதவிகளில் இராணுவத்தில் சேர்வதற்கு www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் வயது மற்றும் கல்வித்தகுதியின் அடிப்படையில் 14.06.2017க்குள் விண்ணப்பிக்கமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் கடல் படையில் பயிற்சியுடன் கூடிய அதிகாரி பணிக்கு +2 படித்த இளைஞர்கள் www.joinindianarmy.nic.in என்ற இணையதளம் வாயிலாக 25.06.2017-க்குள் விண்ணப்பிக்கலாம்.

மேலும் இணையதளம் வாயிலாக மேற்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பித்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் சார்ந்தோர்கள் அதன் விபரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலர் வளாகத்தில் உள்ள முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தெரிவிக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**